# குறள்நெறி


குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

மின்னிதழ் 15 | ஆடி 16, தி.பி 2052 | ஆகத்து 1, பொ.ஆ 2021



சிறப்பாசிரியர் குழு

முனைவர் பொற்கோ
(முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்)

முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்)

முனைவர் இர.பிரபாகரன்
(மேரிலாந்து,அமெரிக்கா)

முனைவர் அன்புசெயா
(சிட்னி,ஆத்திரேலியா)

பாவலர் முரசு நெடுமாறன்
(மலேசியா)

பேராசிரியர் மன்னர்மன்னன்
(மலேசியா)

பேராசிரியர் பெஞ்சமின் லெபோ
(பிரான்சு)

கவிஞர் அழ.பகீரதன்
(இலங்கை)

பொறியாளர் ச.இராசகுமாரன்
(அயர்லாந்து)

திரு.எலியாசு
(சிங்கப்பூர்)

திருமதி.மதிவதனி பத்மநாதன்
(சுவிட்சர்லாந்து)

திருமதி.தாமரை சீனிவாசராவ்
(கம்போடியா)

திரு.ஞானமுருகன்
(இங்கிலாந்து)

முனைவர் இராம சுந்தரம்
(கொரியா)




## அறிஞர் பொற்கோ
## (கட்டுரை உள்ளே)

# திருக்குறள் பட்டிமன்ற வரலாறு - தொடர்கட்டுரை

-பேராசிரியர் கண.சிற்சபேசன்



முதுபெரும் பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்கள் நம் குறள்நெறி இதழின் நிறுவனர் செந்தமிழ் அரிமா சி.இலக்குவனார் அவர்களுடன் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றியுள்ளார்.பட்டிமன்றப் பொழிவில், அறுபதுகளின் தொடக்கத்திலிருந்தே கோலோச்சிவரும் பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்கள் திருக்குறள் தொடர்பான பட்டிமன்றங்களின் வரலாறு குறித்து ஒரு தொடர்கட்டுரையைக் கடந்த ஆறு இதழ்களில் வழங்கியுள்ளார்.அதன் ஏழாம் பகுதி இங்கு வெளிவருகிறது.ஆர்வலர்க்கு விருந்தாகத் தொடர்ந்து வெளிவரும்.

**பட்டிமன்றப் பொருள்: வாழ்க்கை வளம்பெறப் பெரிதும் தேவை பொருளா? அருளா??**

**இடம்: பிள்ளையார்பட்டி - புதிய மண்டபத் திறப்புவிழா**

'பொருளே' என்ற அணித் தலைமை: பேராசிரியர் தா.கு.சுப்பிரமணியன்

'அருளே'என்ற அணித்தலைமை பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம்

பெரும் கூட்டம் கூடியிருந்தது. எப்போதும் கூட்டத்தைக் கூட்டுவது அமைப்பாளரது கடமை. அதைக் கலைப்பது எங்களது தலையாய கடமை. முதலில் அங்குள்ள பிச்சை சிவாசாரியார் இறைவணக்கம் பாடி அனைவருக்கும் அருள் பிச்சை வழங்கினார்.

பொருளே என்ற அணியின் வழக்கை முதலில் எடுத்துச் சொன்னார் பேராசிரியர் தா.கு.சுப்பிரமணியன். அவரை முத்தமிழ்ச் செம்மல் என்று அழைப்பது வழக்கம். ஆடுவார், பாடுவார், நடிப்பார், முழங்குவார், முழுங்குவார். அழுவார் தொழுவார் கேட்கும் மக்களின் கால்களில் விழுவார். எல்லா வேலையும் செய்வார். ஆனால் அதே நேரத்தில் கருத்துக்களைக் கொண்டுவந்து கொட்டுவார். எதிரணியினர் மீது பழிகளைக் கொண்டுவந்தும் கொட்டுவார்.

பொருளின் இன்றியமையாமையைக் குறிக்கத் திருவள்ளுவரைத் துணைக்கு அழைத்தார். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. முதலில் இங்கு வாழும் வாழ்க்கையைப் பார்ப்போம். 'வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்' என்ற பாரதியின் பாடலையும் குறிப்பிட்டார். 'மனித வாழ்க்கைக்கு உணவு, உடை, வீடு இவை வேண்டும் ஐயா. முதலில் அதைக் கவனிப்போம் அதன்பிறகு மேலுலக வீட்டைக் கவனிக்கலாம். 'என் அரி (உடன்பிறந்தவன்) இங்கே தெருவில் பசியோடு இருக்கும்போது கடவுள் அவன் கண்ணுக்குத் தெரியமாட்டான்' என்று வீரத்துறவி விவேகானந்தர் சொன்னதை மேற்கோள் காட்டிப்பேசினார். இவற்றுக்கெல்லாம் மேலாக அன்று எதிரணித் தலைவர் சொ.சொ.மீ,சுந்தரம் அவரிடம் வசமாகச் சிக்கிக் கொள்ளும் வாய்ப்பு ஒன்று

அவரது கைவசம் இருந்தது. நாடகத் தோற்றத்தில் இப்படிக் கேட்டார் தா.கு.சுப்பிரமணியன்.

'நடுவர் அவர்களே நேற்றுக் காலை எதிரணித் தலைவர் எந்த அலுவலகம் சென்றிருந்தார் என்று கேளுங்கள்' என்றார். நான் 'கவிஞரே! நேற்றுக் காலை எந்த அலுவலம் சென்றிருந்தீர்?' என்று கேட்டேன். 'கடவுச்சீட்டு அலுவலத்திற்கு' என்று விடை இறுத்தார் கவிஞர். மீண்டும் தா.கு.கேட்டார்: 'கடவுச்சீட்டுக்கு எவ்வளவு பணம் கட்டினார் என்று கேளுங்கள் ஐயா' என்றவர் தொடர்ந்தார். '3600 ரூபாய் ஐயா! ஏன் அந்தப் பணத்தை செலுத்தினார்? இவர்தான் அருள் வள்ளலாயிற்றே கொஞ்சம் அருளைச் செலுத்தியிருக்கலாமே'!? அவர் பேச்சில் நையாண்டி இழை ஓடியது. கூட்டத்தில் பெரும் ஆரவாரம். 'அதனால் நடைமுறைக்கு அருள் எல்லாம் ஒத்துவராது ஐயா. அருள் ஏட்டுச் சுரைக்காய்; கறிக்கு உதவாது' என்று சொல்லியதுடன் 'ஐயா! நீங்களும் அவரும் நிகழ்ச்சி முடிந்து பேருந்தில் பயணம் செய்யும்போது நடத்துநரிடம் கொஞ்சம் அருளைக் கொடுத்துப் பயணச் சீட்டை வாங்கிக் கொள்ளுங்கள். நான் பொருள்கொடுத்துப் பயணச்சீட்டை வாங்கிக்கொள்கிறேன் என்று கூறியவர் மற்றொரு குறளையும் எடுத்துக்கூறினார்.

அருள் எனும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு – குறள் 757

அன்பு ஈன்றெடுக்கும் குழந்தைதான் அருள். ஆனால் அது நன்றாக உயிர் வாழவேண்டும் என்றால் பொருள் என்னும் செல்வமாகிய செவிலித்தாயின் பாதுகாப்பு வேண்டும். 'அதிலும் நடுவர் அவர்களே! பொருள் என்று மட்டும் சொல்லாமல் செல்வச் செவிலியென்றும் சேர்த்துச் சொல்கிறார்' என்று சொல்லி முடித்தார்.

அடுத்துப் பேச எழுந்த பொற்கிழிக் கவிஞர் முன்னைய பேச்சாளரை முற்றாக மறுத்தார். ஐயா எனது நண்பர் சொன்னதுபோல நான் கடவுச்சீட்டுப் பெறப் பணம் செலுத்தியது என்னவோ உண்மைதான். ஆனால் பணம் செலுத்தும்போது இறைவனது அருளை மனதார எண்ணியவாறுதான் செலுத்தினேன். இன்று காலை அந்த அலுவலகத்திலிருந்து கடவுச் சீட்டு தயாராக உள்ளது என்று செய்தி வந்தது. 'ஐயா! நான் எனது நண்பர் தா.கு.சுப்பிரமணியத்தை ஒன்று கேட்கிறேன். அவர் நெற்றியில் திருமண் இட்டுள்ளாரே?. அது எதற்காக? இந்த மேடை ஏறும்போதுகூட நிலமகளைக் கையால் தொட்டு வணங்கி ஏறினாரே அது ஏன்? ஒவ்வொரு அசைவிலும் இறைவனது அருள் உண்டென்று நம்புவதால்தானே? தனக்கு ஒரு நியதி ஊருக்கு ஒரு நியதியா? ஐயா! நான் திரும்பிப்போகும்போது பேருந்தில் பணம் கொடுத்துப் பயணச்சீட்டு வாங்கினாலும் இறைவன் அருள் இருந்தால்தான் பேருந்து ஒழுங்காகச் சென்று சேரும் இடம் சேரும். இல்லையென்றால் 'கோவிந்தா! கோவிந்தா' தான்.

'அருள் எனும் அன்பீன் குழவி பொருள் என்னும்
செல்வச் செல்வியால் உண்டு' என்ற திருக்குறளை சொன்ன எனது இனிய நண்பர் திருவள்ளுவர் 'அருளுடைமை' என்று ஓர் அதிகாரம் பாடியிருப்பதையே மறந்து விடவில்லை முற்றாக மறைத்துவிட்டார்.

'அருட் செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள' – குறள் 241

என்றும்

'பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்
அற்றார் மற்று ஆதல் அரிது' -குறள் 248

இதைச் சொல்லும்போது எதிரணித்தலைவர் தா.கு.சுப்பிரமணியத்தைத் தனது கையால் சுட்டிக்காட்டத் தவறவில்லை கவிஞர். பொருள் இல்லாதவர்கள் மற்றொரு காலத்தில் செல்வச்செழிப்பு அடையக்கூடும். அருள் அகத்திலில்லாதவர்கள் அப்படியேதான் இருப்பர்.

இவ்வாறு இரு அணியினரும் வழக்கைச் சொன்னபிறகு நான் எனது தீர்ப்பை வழங்கத் தொடங்கினேன். 'வாழ்க்கை வளம்பெறப் பெரிதும் தேவை பொருளா? அருளா?' என்பது பட்டிமன்றத்தின் பொருள். வாழ்க்கை வளம் என்றால் என்ன? வளம் என்றால் மன மகிழ்ச்சியா? அல்லது வாழ்க்கை வசதிகளா? இன்றைய வாழ்க்கைச் சூழலில் வாழ்க்கை வசதிகளைத் தான் அதிகம் தேடி அலைகிறோம். மன அமைதி, அக அழகு இவற்றுக்கு அதிக மதிப்புத் தருவதில்லை. இந்த நிலையை அடிப்படியாகக் கொண்டு ஆராய்ந்தால் பொருளை விட அருளுக்கே முதலிடம் கொடுப்போம். அருள் என்பதை இறையருள் என்றும் நம் மனதில் ஊறும் கருணையாகிய அருள் என்றும் இரு வகைகளாகக் கொள்ளலாம். கண்ணோட்டம் இல்லாத கண் என்பார் திருவள்ளுவர்.

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்' –குறள் 751

என்று திருவள்ளுவர் பொருளின் பெருமையைக் கூறுகிறார். இதன் பொருள் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

தொடர்பில்லாதவரிடத்திலும் செலுத்துவது அருள். தொடர்பு உடையவர்களிடத்தில் செலுத்துவது அன்பு. அருளில் ஒரு பங்கு இரக்கமும் பெரும் பங்கு பிற நலமும் கலந்திருக்கும். ஆனால் அன்பில் தன்னலம் மட்டுமே இருக்கும். தனக்குக் கிடைத்த இனிப்பைத் தனது பேரனுக்குக் கொடுக்க மடியில் மறைத்து எடுத்துச் செல்லும் பாட்டியின் உணர்வு அன்பு. உலகக் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லும் அன்னை தெரிசாவின் உணர்வு அருள். மற்றை உயிர்களின் நன்மையைத் தனது உயிரினைவிட மேலாகக் கருதும் பெரியவர்களை அருளாளர்கள் என்கிறோம். இந்த உலகத்தையும் அதில் வாழும் எண்ணற்ற உயிரினங்களயும் தனது குழந்தைகளாகக் கருதும் கருணையாளனாகிய இறைவனைப் பேரருளாளன் என்கிறோம்.

'தன்னூன் பெருக்கத்திற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்' –குறள் 251

நீங்கள் இறைவன் இருக்கிறான் என்பதை நம்புகிறீர்களோ இல்லையோ? இதுபோன்ற நல்ல குணங்கள்தான் இறைவனின் கூறென்று கூறுங்கள். கூறிப்பாருங்கள். பார் உங்கள் கையில் வந்து உய்யும்.

முன்பு எடுத்துக்காட்டப்பட்ட திருக்குறளைப் போன்று 'இன்று பொருள் அற்றவர்கள் ஒரு காலத்தில் பூத்துக்குலுங்கிச் செல்வராக வாய்ப்பு வரலாம். ஆனால் இன்று அருளைப் பழகிக்கொள்ளாதவர்கள் ஒரு காலத்திலும் அருட்தோப்பாக வளர்ந்து காய்த்துக் கனிந்து பிறருக்குப் பயன்படமுடியாது. ஆகவே நமது கல்வி, கேள்வி, அறிவுடைமை, மெய்யுணர்தல் ஆகிய எல்லாம் பொதுநல நோக்கு உடையனவாகவே இருத்தல் வேண்டும். இப்படிப் பார்க்கும்போது வாழ்க்கையின்

வளத்திற்குத் தேவை பொருள் என்றாலும் வாழ்க்கை வளம்பெறப் பெரிதும் தேவை அருளே!' என்று எனது தீர்ப்பை வழங்கி நிறைவு செய்தேன்.

பிறகு எல்லோரும் திருக்கோயிலுக்குள் சென்று வழிபாடு செய்தோம். அங்கு குறிப்பாக எங்கள் மனமெல்லாம் உருகத் தனது கணீர் குரலால் பாடிக் கண்ணீர் மல்க நின்றவர் பேராசிரியர் தா.கு.சுப்பிரமணியன். வலிய இழுத்து வந்து பரிசுப் பொருளைக் கொடுத்தனர் விழா அமைப்பாளர்கள். தனக்குக் கொடுக்கப்பட்ட கோயில் உணவை வருகிற வழியில் தனக்குப் பின்னே ஓடிவந்த நாய்களுக்கு அளித்து மகிழ்ந்தவரும் அவரே. அவர் ஒருவர் மட்டுமே!.

# திருக்குறள் - பொற்கோ உரை
## -முனைவர் ப.சு. மூவேந்தன்

(உதவிப்பேராசிரியர் தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

*பொற்கோ திருக்குறளுக்கு உரை எழுதியதன் நோக்கம், திருக்குறளை விளக்கப் பொற்கோ கைகொண்ட உரைநெறிகள் ஆகியவற்றை முறையாக விளக்குகின்றது கட்டுரை. பொற்கோவின் உரைக் கொள்கையையும் உரைவிளக்கப் பொருத்தப் பாட்டினையும் கட்டுரையாளர் விளக்கியுள்ளார்.*

பேராசிரியர் பொற்கோவின் திருக்குறள் உரைவிளக்கம், 2004இல் சென்னை பூம்பொழில் வெளியீடாக வெளிவந்துள்ளது. இதன் திருத்தப்பட்ட பதிப்பு 2010இல் வெளியாகியுள்ளது. தாம் பயின்ற காலத்தில் மனங்கொண்ட பொருள்நிலையினையும், மாணவர்களுக்குப் பாடம் நடத்துங்கால் நிகழ்ந்த தடை விடைகளையும், தான் ஆய்வு செய்யுங்காலத்து உளங்கொண்ட கருத்தியல் விளக்கங்களையும் கருத்தில் கொண்டு பல்லாண்டுகள் உழைத்து ஆழ்ந்து சிந்தித்த பின்னரே குறளுரையினை நூல்வடிவில் கொண்டு வந்துள்ளார் என்பதனை நூலின் முகவுரை (ப. 8) தெளிவுறுத்துகிறது.

### உரையின் நோக்கம்

திருக்குறள், பல பொதுமைக் கருத்துகளுக்கு இடமளிப்பது. இதன் காரணமாகவே அது உரையாசிரியரின் எண்ணத்திற்கும் கருதுகோளுக்கும் ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் வன்மையுடையதாய் விளங்குகின்றது. இதனால் உரையாசிரியர்கள் பலரும் தங்கள் கருத்தினைத் திருக்குறளில் புகுத்த முயல்வது இயல்பான ஒன்றாக உள்ளது. இதனால் திருவள்ளுவர் கருத்து இதுதான் என்று துணிந்து கூறுகின்றனர். இதில் உரையாசிரியர் பொற்கோவுக்கு உடன்பாடில்லை. மரபார்ந்த இலக்கணப் பயிற்சியும் மொழியியற் சிந்தனைத் திறனும் மிக்க அவர் தனது உரையின் நோக்கத்தினைப் பின்வருமாறு நூலின் முன்னுரையில் தெளிவுபடுத்துகின்றார்.

‘திருக்குறளைப் படிக்க வந்தவர்களிடம் ஊகமான கருத்துகளைச் சொல்லி அவற்றை நம்பவேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. சொல் விளையாட்டுகளில் ஈடுபட்டு நம்முடைய கருத்தைத் திருக்குறளில் திணிக்கக் கூடாது. இந்த உணர்வோடு மாணவர்களுக்குத் திருக்குறளைச் சொல்லிக் கொடுக்க நினைத்தால் எப்படிச் சொல்லிக் கொடுப்போமோ, அதைத்தான் இந்த உரைவிளக்கத்தில் முறையாகவும் சுருக்கமாகவும் பதிவு செய்திருக்கிறேன்.” (முன்னுரை, ப. ix)

### திருக்குறள் உரைக்கொள்கை

பொற்கோவின் உரைநெறியானது

திருக்குறளின் சிறப்பினை எடுத்துரைத்தல்
உரை மரபைப் பின்பற்றுதல்
பழமை போற்றுதல்
புதுமையைக் கொணர்தல்

உரைநெறி வகுத்தல்
என்னும் நிலைகளில் அமைந்துள்ளது. இவற்றில் உரைநெறி வகுத்துள்ள பாங்கு மட்டும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.

## உரைநெறி வகுத்தல்

பேராசிரியர் பொற்கோ, ஒரு செறிவான வரையறையுடன் திருக்குறள் உரையை வகுத்துள்ளார். அவர் திருக்குறளின் ஒவ்வொரு குறளுக்கும் உரை வகுத்துள்ள உரைநெறி,

உரைத்தொடர் உருவாக்குதல்
உரைத்தொடர் விரிவாக்கம் செய்தல்
பொருள்விளக்கமும் குறிப்பும் தருதல்
என்னும் மூன்று நிலைகளில் அமைந்துள்ளது. இம்மூன்று நிலைகளிலேயே 1330 குறள்களுக்கும் விளக்கம் தந்துள்ளார். இது பொற்கோ உரைவிளக்கத்தின் உரை நெறியாக அமைந்துள்ளது.

## உரைத்தொடர் உருவாக்குதல்

'உரைத்தொடர்' என்பதில் திருக்குறளின் செய்யுள் வடிவம் உரைநடைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமையும் முறையினைப் பொருள்விளக்கத்தின் தொடக்க நிலையாகக் குறிப்பிடுகின்றார் உரையாசிரியர்.

இவ்வாறு குறளை உரைநடைப்படுத்தும் முறையினையும், உரை நடைப்படுத்திய விதத்தினையும், 'செய்யுள் நடையில் உள்ள தொடர்கள் இயல்பாக ஆற்றொழுக்காக இல்லாமல் பல நேரங்களில் மாறி அமைந்திருக்கும், சில நேரங்களில் இயல்பாக அமைந்திருக்கும். செய்யுளில் உள்ள தொடர்களை இயல்பாக ஆற்றொழுக்கில் உரைநடை வரிசைப்படி மாற்றி அமைத்தால் செய்யுளின் பொருள் நமக்குப் புலப்படத் தொடங்கிவிடும்" என்று குறிப்பிடுகிறார். சான்றாக,

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். – (குறள். 116)

என்னும் குறளினை, "தன்நெஞ்சம் நடுஒரீஇ அல்ல செயின் கெடுவல்யான் என்பது அறிக" என்று உரைத்தொடராக்குகின்றார். இவ்வாறு உரைத்தொடர் உருவாக்குவதன் வழியாகச் செய்யுளின் திரண்ட கருத்தினை உரைநடைப்படுத்துவது தெளிவாகிறது.

## உரைத்தொடர் விரிவாக்கம் செய்தல்

குறளின் பொருள்விளக்க நிலையின் இரண்டாவது நிலையாக 'உரைத்தொடர் விரி' அமைந்துள்ளது. முதலில் குறளின் தொடர்களையும், சொற்களையும் கொண்டு உரைத் தொடராக்கிக் காட்டும் உரையாசிரியர், அதன் பின்னர் உரைத்தொடராக மாற்றும் போக்கும் தெளிவாகிறது. உரைத்தொடரின் பொருளை மேலும் பொருள் உணர்த்தும் நிலைக்கு இட்டுச் செல்வதாக இப்பகுதி அமைந்துள்ளது. சான்றாக,

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. – (குறள். 277)

என்னும் குறளுக்கு, “இந்த உலகம் புறங்குன்றி கண்டனையரேனும் அகத்தில் குன்றி மூக்கினைப் போலக் கரியராய் உள்ள துறவிகளை உடையது” என்று உரைத்தொடர் விரிவாக்கம் செய்துள்ளார்.

## பொருள் விளக்கமும் குறிப்பும் தருதல்

திருக்குறள் உரைவிளக்கத்தின் மூன்றாவது நிலையாகப் ‘பொருள் விளக்கமும் குறிப்பும்’ அமைந்துள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு குறளுக்குமான பொருள் விளக்கமும் இலக்கணக் குறிப்புகளும் பாடபேதங்களும் பிற செய்திகளும் விரிவாக இடம் பெற்றுள்ளன.

உரைத்தொடர், உரைத்தொடர் விரி, பொருள்விளக்கமும் குறிப்பும் ஆகியன விளக்குமுறையின் படிநிலைகளாக அமைந்துள்ளன. பொருள் விளக்க நிலையில் ஒவ்வொன்றாகச் சொல்லிச் செல்வதாக இப்படிநிலை வளர்ச்சி அமைந்துள்ளது. இப்பொருள் விளக்க நிலையில் தேவைப்படும் இடங்களில் நீண்ட விளக்கங்களைத் தந்துள்ளார். இவை ஆசிரியர் தம் மாணவர்களுக்குப் பாடம் நடத்தும் விதத்தினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் நடத்துகையில் இலக்கியத்தில் இடம்பெறும் சொற்களையும், அதன் பொருளையும் அறிந்து கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு நிலையாக மாணவர்களைப் பொருளுணத்தும் நிலைக்கு இட்டுச் செல்வதை ஒத்ததாய் இப்பகுதி அமைந்துள்ளது.

திருக்குறளின் உரைவிளக்க முறையினை இவ்வாறு அமைத்துள்ள தன்மை குறித்து, “இந்த உரைவிளக்கத்தில் ஒவ்வொரு குறளையும் உரைநடை வரிசையில் அமைத்துக் காட்டி வாசிப்பாளர்களுக்குத் திருக்குறளை நெருக்கமாக்கியிருக்கிறேன்; அடுத்த நிலையில் தேவையான சொற்களை மட்டும் இட்டு நிரப்பிப் பொருள் புலப்பாட்டுக்கு வழி வகுத்திருக்கிறேன்; மூன்றாவது நிலையில் தேவையான விளக்கங்களையும் குறிப்புரைகளையும் முறையாகச் சேர்த்திருக்கிறேன்” (ப. 8) என்று குறிப்பிடுவதன்வழி அறிய முடிகிறது.

## சொல் நிலையில் பொருள்விளக்கம் செய்தல்

ஒரே குறளுக்கு இரண்டு, மூன்று பொருள்விளக்கங்கள் தரும் பகுதிகளும் பொற்கோ உரையில் உள்ளன. திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள சொற்களின் பொருளுணர்த்தும் திறன் அவ்வாறு அமைந்திருப்பதும் அதற்கு ஒரு காரணமெனக் குறிப்பிடுகிறார்.

## இருபொருள் உரைத்தல்

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு – (குறள். 396)

என்னும் குறளுக்கு, “மணற்கேணி தோண்டத் தோண்ட நீர் சுரக்கும்; மாந்தர்களிடம் கற்க கற்க அறிவு ஊறும்” என்று ஒரு பொருளும், “தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் ஊறும்; அதுபோலக் கற்கக் கற்க மாந்தரிடம் அறிவு ஊறும்” என்று மற்றொரு பொருளும் உரைக்கின்றார். இதில் ஒரு பொருள் உவமை போன்றும், மற்றொரு பொருள் பொருள்போலவும் கொள்ளப்பட்டு இருபொருள் தரப்பட்டுள்ளது. இவ்வடிப்படையில் ஒரு குறளுக்கு மூன்று பொருளும் தந்துள்ள நிலையினைக் காண முடிகின்றது.

“மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.” – (குறள். 1119)

என்னும் குறளுக்கு, “இவள் பலர் காணத் தோன்றமாட்டாள். இவள் முகத்தை ஒத்து விளங்க நீ விரும்பினால் இனிமேல் பலர் காணத் தோன்றாதே என்பது ஒரு பொருள்; நீ இவள் முகத்தை ஒத்து விளங்குவது உண்மையானால் இனி நீ பலர் காணும் வண்ணம் பொதுவில் தோன்றாதே என்பது இன்னொரு பொருள்” என்று இருபொருள் உரைக்கின்றார்.

“மாலைநோய் செய்தல் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்” – (குறள். 1226)

என்னும் குறளில் இடம்பெறும் காலை என்னும் சொல் காலைப் பொழுது, நேரம், சமயம், காலம் என்னும் பலபொருள் கொண்டதாய் அமைந்துள்ளதனைக் கருத்தில் கொண்டு இருபொருள் உரைக்கும் நிலைப்பாட்டினை மேற்கொள்வதனைக் காண முடிகிறது.

“மாலைப் பொழுது இப்படி எனக்கு நோய் செய்யும் என்பதை நான் இப்போது தான் உணர்ந்துகொள்கிறேன். என் காதலர் என்னை விட்டுப் பிரியாதபொழுது நான் இதனை அறிந்ததில்லை. காதலர் உடன் இருந்தபொழுது மாலைப் பொழுதுக்குத் துன்பம் தருகின்ற வல்லமை உண்டு என்பது எனக்குத் தெரியாது. ஒவ்வொரு நாளும் வருகின்ற மாலைப் பொழுது இப்படித் துன்பம் தரும் என்பது தெரிந்திருந்தால் அவர் என்னை விட்டுப் பிரிய இடங்கொடுத்திருக்க மாட்டேன்” என்று ஒரு பொருளும், “இன்று காலையில்தான் அவர் என்னை விட்டுப் பிரிந்தார். காலையில் அவர் என்னோடு உடன் இருந்தார். மாலைப் பொழுது இப்படித் துன்பம் தரும் என்பதை அவர் என்னோடு உடன் இருந்த காலைப் பொழுதில் நான் தெரிந்துகொள்ளவில்லை” என்று மற்றொரு பொருளும் உரைக்கின்றார்.

## உரை மறுப்பும் ஏற்பும்

பொற்கோ, திருக்குறள் உரைத்திறன் வகுத்தலில் பிறர் உரைகளை மேற்கோளாகக் காட்டுதல், பிறரது உரைகளின் நயங்களை எடுத்துரைத்தல், பிற உரையாசிரியர்களின் கருத்தியல் பொருத்தப்பாட்டை மறுத்தல், அவர்களின் விளக்கமுறைத் தெளிவின்மையைக் காட்டுதல் என்பன போன்ற நிலைகளில் உரைவிளக்கப் பகுதிகள் அமைந்துள்ளன.

## பிறர் உரை மறுத்துத் தம் உரையை நிறுவுதல்

பொற்கோ, திருக்குறள் மூல வடிவில் நுண்ணிய வாசிப்பும், ஏனையோர் உரைகளில் ஆழ்ந்த பயிற்சியும், அகலமான வாசிப்பும், தீவிரமான ஆய்வுப் போக்கும் கொண்டு விளங்குவதனை அவரது உரைக் குறிப்புகள் காட்டுகின்றன. அவ்வகையில் திருக்குறள் உரையாசிரியர்கள் பலரது கருத்துகளைக் கோடிட்டுக் காட்டியும், சிலரது உரைகளை ஒட்டியும் ஏற்றும் மறுத்தும் விளக்கம் செய்துள்ளார். இவ்வாறு அமையும் பகுதிகள் தனிநிலை ஆய்வுக்குரிய பொருண்மைகளைக் கொண்டு விளங்குகின்றமையான், ஆய்வின் விரிவஞ்சி இங்கு, பிற உரைகளை மறுத்துத் தம் உரையை நிறுவும் பாங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

பிறர் உரையை மறுக்கும்போது மிக நயமாகவும் நாகரிகமாகவும் வெளிப்படுத்தும் பாங்கு அவரது உரைநயத்திற்குச் சான்றாக அமைகிறது. தம்முடைய மறுப்புகளில் எந்த உரையாசிரியர் பெயரையும் சுட்டாது அவர்களுடைய கருத்துகளையே தம் மறுப்புகளுக்கு உரியதாக்கிக் கொள்வது அவரது செவ்விய உரைநெறியாக உள்ளது. இவ்வாறு அமையும் பகுதிகள் திருக்குறள் விளக்கத்தில் நீண்ட விவாதங்களுக்கு உரியனவாக அமைந்துள்ளமை கருதத்தக்கது.

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது." – (குறள். 8)

என்னும் குறள் விளக்கத்தில், "துன்பக் கடலை நீந்திக் கரைசேருதல் அரிது என்று ஆசிரியர் தெளிவாகக் கூறுதலால் இறைவன் தாளாகிய புணை என்பது இவ்விடத்தில் பொருந்தாது. புணையைப் பிடித்துக்கொண்டு கரை சேருதலும் நீந்துதலும் வேறு வேறு என்பதைக் கருதுக" என்ற பிற உரையாசிரியர் கருத்தை மறுத்து, "பிறஆழி என்பதற்குப் பொருளும் இன்பமும் ஆகிய கடல் என்று பொருள் கூறுவதைவிட, அறத்துக்கு மாறாகிய மறச் செயல்களால் விளையும் துன்பக் கடல் என்று பொருள் செய்வதே பொருத்தம்" என்று விளக்கமும் தருகின்றார்.

"இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை" – (குறள். 47)

என்னும் குறளில் இடம்பெறும் முயல்வார் என்பதற்கு, "முயல்வார் என்பது வானப்பிரத்த நிலையில் மனைவியோடு காட்டில் இருந்து தவம் செய்வோரைக் குறித்தது என்று கூறுவாரும் உளர்" என்று பிறர் உரையைக் குறித்துப் பின்னர், "திருவள்ளுவர் துறந்தார் பெருமையை வியந்து வியந்து பாராட்டிப் போற்றியவர் என்பதை மறவாமல் இக்குறளுக்கு உரைகூறுதல் வேண்டும். எனவே, முயல்வார் என்பதற்கு அறஇயல்பு அல்லாத வேறு நெறிகளில் முயல்வார் என்று பொருள் கொள்ளுவதே பொருந்தும்" என்று விளக்கம் தருகின்றார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்." – (குறள். 69)

என்னும் குறளுக்கு "தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும் தன் மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய் பெண்ணியல்பாற் றானாக அறியாமையின் கேட்ட தாய் என்றார்" என்று பொருளுரைப்பார் பரிமேலழகர். "பெண் இயல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் என்றார் என்று கூறும் விளக்கம் சிறப்புடைத்து ஆகாது" என்று பரிமேலழகர் உரையை மறுத்து, "சான்றோன் என்னும் சொல்லுக்குப் போர்வீரன் என்று பொருள்கொண்டால் தானாக அறியாமையின் கேட்ட தாய் என்று விளக்கம்கூறுவது பொருந்தும்" என்று விளக்கமும் தருகின்றார். இவ்விடத்தில் சான்றோன் என்பதற்கு கல்வி கேள்விகளில் சிறந்தவன் என்று பொருள்கொள்வதைவிட, மிகச் சிறந்த போர்வீரன் என்று கொள்வதே பொருத்தமானதாக அமைந்துள்ளதுஇவ்வாறு அமைவதில் உரையாசிரியரின் பொருத்தப்பாடு அவரது உரைக்கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்கு ஏற்றதாக அமைந்திருப்பதனைக்காண முடிகிறது.

## புதுமை விளக்கம் தருதல்

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. – (குறள். 57)

என்னும் குறள் விளக்கத்தில் "ஆணாயினும் பெண்ணாயினும் வழிதவறிப் போக வேண்டும் என்று தாமே விரும்பினால் அவர்களை நெறிப்படுத்துவதற்காக அவர்களைச் சிறைவைப்பதாலும் காவல் காப்பதாலும் பயன் இல்லை. ஒழுக்கக் கேட்டினால் வருகின்ற தீமைகளை உணர்த்தி ஒரு பெண்ணின் மனத்தில் நிறைகுணத்தை உண்டாக்கி அதை அவளே காக்குமாறு செய்தல் தலையாய காப்பு என்றார். மகளிர்க்கே சொன்னார் எனினும் ஆடவர்க்கும் இது பொருந்தும்" என்று புதுவிளக்கம் தருகின்றார். இவ்விளக்கத்தின்வழி பெண்ணின் நிறை ஆண்களின் செயல்பாட்டினைப் பொறுத்தே அமைகிறது என்ற விளக்கமும் உணர்த்தப்படுகிறது. இதேபோன்று,

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை - (குறள். 414)

என்னும் குறளுக்கு, "ஒருவன் கல்வி பெறவில்லை யென்றாலுங்கூட அவன் நூலறிவும் நுண்ணறிவும் உடையார்தம் வாய்ச்சொற்களைக் கேட்பானாகுக. ஏனென்றால் அந்தக் கேள்வி அவனுக்குச் சிந்தனையில் தளர்ச்சி நேருகின்ற பொழுதெல்லாம் ஊன்றுகோல் போல நின்று துணைபுரியும். நடக்கின்ற ஒருவனுக்குச் சோர்வின் காரணமாகக் கால் தடுமாறும் பொழுது கையில் இருக்கின்ற ஊன்றுகோல் உதவுவது போல, சிந்தனையோட்டத்தில் தளர்ச்சி ஏற்பட்டு ஒருவனுக்குத் தடுமாற்றம் ஏற்படும் பொழுது அவன் பெற்ற கேள்வி அறிவு அவனுக்கு உறுதுணையாக நிற்கும்" என்று விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு அமையும் விளக்கங்கள், காலத்தின் பொருத்தப்பாட்டையும் பொதுமைச் சிந்தனையையும் வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளன.

### காலத்தின் தேவைக்கேற்ற விளக்கம் தருதல்

திருக்குறள், எல்லாக் காலத்திற்கும் ஏற்றதும் பொருத்தமானதுமாகும். அவ்வகையில் அதன் விளக்கமும் காலத்தின் தேவைக்கேற்ற விதத்தில் அமைதல் வேண்டும். இத்தகு நிலையில் பொற்கோ உரைவிளக்கமும் அமைந்துள்ளது. சான்றாக.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல் – (குறள். 33)

என்னும் குறளுக்கு, "ஒருவன் தன்னால் முடிந்த வகையில் அறச் செயல்களை இடைவிடாமல் அவற்றுக்குத் தேவை ஏற்பட்ட பொழுதெல்லாம் செய்தல் வேண்டும். நல்வினை ஒன்று நடைபெற வேண்டுமானால் அந்தத் தேவையினைக் கண்டும் காணாததுபோல் இருந்து விடாமலும், அந்தச் சூழலில் இருந்து நழுவித் தப்பித்துக் கொள்ளாமலும் முடிந்த வகையில் அந்த நல்வினை நிகழப் பாடுபட வேண்டும். ஒரு நல்வினையை நிறைவேற்ற ஒருவன் மனத்தால் பாடுபடலாம்; சொல்லால் உதவலாம்; செயலால் உதவலாம்; இயன்ற வகையில் தன்னாலான பொருளை வழங்கியும் உதவலாம்; முடிந்தால் எல்லா வழியிலும் ஒருசேரவும் உதவலாம்; அப்படியெல்லாம் வினையாற்றி அறம் வளர்க்கப்பட்டால் தான் சமுதாயம் மகிழ்ச்சியாக வாழ முடியும். இது இல்லறத்தார்க்கும் பொருந்தும்; துறவறத்தார்க்கும் பொருந்தும்" என்று விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு அமையும் உரைவிளக்கப் பகுதிகள் இக்காலச் சூழலுக்குப் பெரிதும் பொருந்த வருவதனை உணர முடிகிறது.

## இலக்கிய நயம் காணல்

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால் - (குறள். 1141)

என்னும் குறள் விளக்கத்தில், "அலரால் பாதிக்கப்பட்ட தலைவன் கூறியது. களவு வெளிப்பட்டு அலராகும்போது ஏற்படுகின்ற மனநலிவு மற்ற துன்பங்களிலிருந்து வேறுபட்டது. இந்த மனநலிவு மனநலிவுக்கு உட்பட்டவர்க்கு மட்டுமே தெரியும். மற்றவர்க்குத் தெரியாது. இந்த நலிவு காதலர் உயிரைப் போக்காமல் இப்போது காத்து நிறுத்தியிருக்கிறது. காதலர் தம் நட்பு இந்த அலர் மூலம் உயிர்ப்போடு நெஞ்சில் எழுந்து நிற்றலால் உயிர் நீங்காது நிற்கிறது. இந்த உண்மை, காதலர்க்கு மட்டுமே தெரியும். மற்றவர்க்குத் தெரியாது. வெளியுலகிற்குத் தெரியாத நுட்பமான செய்திகள் இங்கே நயமாகச் சுட்டப்படுகின்றன"149 என்று திருக்குறளின் நுட்பத்தினை எடுத்துரைக்கின்றார்.

காமமு நாணு முயிர்காவா தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து – (குறள். 1163)

என்னும் குறளின் சிறப்பினை, "உயிராகிய காத்தண்டில் ஒரு பக்கம் காமம் தொங்குகிறது. இந்தக் காத்தண்டு அவளுடைய மெல்லிய உடலுக்குத் துன்பம் தருவதாக இருக்கிறது. காமம், நாணம் ஆகிய இரண்டில் எதையும் விடமுடியாமல் அவள் தவிக்கிறாள். மிக நுட்பமாக உணர வேண்டிய இந்தச் செய்தியை இந்தக் குறள் ஒரு படம்போல ஆக்கிக் காட்சிப்படுத்திக் காட்டுகிறது" என்று நயம்பட எடுத்துரைக்கின்றார்.

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. – (குறள். 1221)

என்னும் குறளின் பொருட்சிறப்பினை, "வேலை என்ற சொல் 1. வேலினை உடையாய், 2. வேலாக விளங்குகின்றாய் என இரண்டு பொருளையும் தரும். வேலை என்பதற்குக் கடல் என்றும் பொருள் கொள்ளலாம். பிரிந்திருக்கின்ற மகளிரின் உயிரை உண்ணுகின்ற கடலாக விளங்குகிறாய் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. வேலை என்பதற்குக் காலம், சமயம் என்றும் பொருள் உண்டு. மாலைப்பொழுதே நீ மாலை நேரமல்ல; பிரிந்திருக்கின்ற மகளிரின் உயிரை உண்ணுகின்ற பொழுது என்றும் பொருள் கொள்ள இடமுண்டு.

இத்துணைப் பொருள்களும் சந்திக்கின்ற முறையில் ஆசிரியர் இந்தத் தொடரை அமைத்திருப்பது இலக்கிய நோக்கில் உணர்ந்து உணர்ந்து பாராட்டத்தக்கது" என்றும்,

ஒருநாள் எழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு - (குறள். 1269)

என்னும் குறள் விளக்கத்தில், "புற உலகுக்கும் அக உலகுக்கும் உள்ள உறவு நிலையை இந்தக் குறள் மிக அழகாக விளக்குகிறது. மிக இன்றியமையாத உளவியல் உண்மை ஒன்று போகிற போக்கில் எளிதாக எடுத்துப் பேசப்படுகிறது" என்றும்,

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு – (குறள். 1281)

என்னும் குறள்விளக்கத்தில், "எனக்கும் என் தலைவனுக்கும் உள்ள உறவை இத்தகையது என்று சொல்லாமல் காம உணர்ச்சி பற்றிய ஒரு பொது உண்மையினைத் தலைவி தோழிக்கு இங்கே எடுத்துக் கூறியிருப்பது தமிழ் அகப்பொருள் நுட்பத்தின் ஒரு தனிச்சிறப்பு. உளவியல் நோக்கில் இந்தச் செய்தி மிக இன்றியமையாதது" என்றும்,

ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. – (குறள். 1284)

என்னும் குறள்விளக்கத்தில், "தனது நெஞ்சு தன்னைவிடத் தன் காதலருக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைத் தலைவி உணர்த்தும் பாங்கு உளவியல் நுட்பமும் இலக்கிய நயமும் உடையதாகத் திகழ்கிறது" என்றும்,

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் – (குறள். 1330)

என்னும் குறள்விளக்கத்தில், "ஊடல் என்பது மேலோட்டமாகப் பார்த்தால் எரிச்சல் உண்டாக்குகிற ஒன்றாக விலக்கத்தக்க ஒன்றாக சிறுபிள்ளைத்தனம் கொண்டதாக, பகட்டுத்தனம் உடையதாகத் தோன்றுகிறது. ஆனால், உளவியல் நோக்கில் தலைமக்கள் பார்வையில் நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஊடல் என்பது தனிச் சிறப்புக்கு உரிய ஒரு மன நிகழ்ச்சி என்பது விளங்குகின்றது. இது பண்பட்ட மனித சமுதாயத்துக்கு மட்டுமே உரியது. இதனால் தான் ஊடலை மெச்சிப் பேசுவதற்காகவே ஒரு அதிகாரத்தைத் திருவள்ளுவப் பெருந்தகை அமைத்திருக்கிறார்" என்று திருவள்ளுவரைப் புகழ்ந்துரைக்கின்றார்.

## இலக்கண நோக்கும் பொருளுணர்த்து முறையும்

பொற்கோ உரைக்கொள்கையில் இலக்கண நோக்கும் மொழியியல் அணுகுமுறையும் சிறப்பிடம் பெற்றுள்ளன. இலக்கியத்தில் இடம்பெறும் சொற்களை இலக்கண நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் மனங்கொண்டு அவற்றிற்குரிய இலக்கணங்களைச் சுட்டிச் செல்வதும், அவ்விலக்கண அடிப்படையில் விளக்கம் தருவதையும் ஒரு மரபாகவே கொண்டுள்ளார்.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள – (குறள். 223)

என்னும் குறள்விளக்கத்தில் இரு உரைகளைத் தருகின்றார். இவ்வாறு அமைவதற்கான காரணங்களை உரையின் இறுதியில், "உள என்ற பன்மை வினைமுற்று உரையாமை ஈதல் ஆகிய இரண்டையும் இருவேறு இயல்புகளாகுமாறு வற்புறுத்துகிறது. உள என்ற இந்த முற்று பன்மையில் இல்லாமல் ஒருமையில் இருந்திருந்தால் உரையாமை ஈதல் என்பதை ஒருதொடராக்கி எவ்வம் உரையாமல் ஈதல் என்று பொருள்கொள்ள இயலும். இங்கே உள என்ற பன்மை வினைமுற்றின் மூலம் இப்படிப்பட்ட உரைகளை நாம் உணரவேண்டி உள்ளது" என்று குறிப்பிடுவதன்வழி தெளிவாகிறது.

## குறளின் தொடரமைப்பு விளங்கவில்லை எனல்

சில குறள்களின் தொடரமைப்பு விளங்கவில்லை என்றும் அதற்கு வேறு விளக்கங்கள் கிடைத்தால் ஏற்கலாம் என்றும் குறிப்பிடுகிறார்.

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார் – (குறள். 10)

என்னும் குறளின் தொடரமைப்பு குறித்து, "இந்தக் குறளின் தொடரமைப்பு சற்றே சிக்கல் வாய்ந்ததாக இருக்கிறது. நீந்துவர் என்பதற்கு உரிய எழுவாயை நாம் வலிந்து வருவிக்க வேண்டி உள்ளது" என்று கூறுகின்றார். இதே போன்று சில குறள்களின் (குறள். 25, 235) தொடரமைப்பும் சரியாகப் பொருள் விளங்கும் நிலையில் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

## பொருள்விளக்க இயலா நிலை கூறல்

இயல்புடைய மூவர் (41) என்னும் சொல்லின் பொருளுக்கு இதுவரை வந்துள்ள விளக்கங்கள் தனக்கு நிறைவு தருவதாக இல்லை என்று கூறி, "இயல்புடைய மூவர் என்பதற்கு வேறு நல்ல விளக்கம் கிடைத்தால் ஏற்றுக்கொள்ளலாம்" என்று குறிப்பினைத் தந்துள்ளதனையும் காண முடிகிறது.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. – (குறள். 37)

என்னும் குறள்விளக்கத்தில் "இந்தக் குறளுக்கு மேலும் விளக்கம் தேவைப்படுகிறது" என்று குறிப்பிடுகின்றார்.

"சில சொல்லாட்சிகள், இலக்கண அமைப்பு முறைகள் திருவள்ளுவரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் திருவள்ளுவரின் சமகால நூல்களை வைத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் மட்டுமே இது மாதிரியான குறள்களுக்கு விளக்கம் தர முடியும்" என்றும் கூறுவது உரைநெறிக்கு மொழியியல் அறிவு மிக இன்றியமையாதது என்பதனைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு குறித்துள்ள நிலைமையினைக் குறித்து, "வள்ளுவர் ஒரு குறிப்பிட்ட குறளில் என்ன சொன்னார் என்பதை எப்படித் தெரிந்துகொள்ளுவது? தெரிந்து கொள்ள முடியாமல் போனால் விளங்கவில்லை என்று சொன்னால் பிழை இல்லை. ஊகமாகக் கருத்துகளைச் சொல்லி அவற்றை நம்ப வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. சொல் விளையாட்டுகளில் ஈடுபட்டு நம்முடைய கருத்தைத் திருக்குறளில் திணிக்கக் கூடாது" (ப. 233) என்று விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு திருக்குறள் உரைவிளக்கத்தில் பொற்கோ வகுத்துள்ள உரைக்கொள்கை நெறி தெளிவாகிறது.

## முடிவுரை

பண்டைய உரை மரபினைப் பல இடங்களில் பின்பற்றியும், பல்வேறு புதுமை நெறிகளையும் கொண்டதாய்ப் பொற்கோவின் திருக்குறள் உரைவிளக்கம் அமைந்துள்ளது.

துணைநின்ற நூல் (Reference Books): பொற்கோ, திருக்குறள் உரைவிளக்கம், (4 தொகுதிகள்), பூம்பொழில் வெளியீடு, சென்னை, திருத்தப்பட்ட பதிப்பு 2010.
நன்றி:வல்லமை

# திருக்குறள் பொருளின் விரிவு

## - முனைவர் மு. முத்துவேலு

(மேனாள் தமிழ்ப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை – 600 005 | 9840215985, Muthuvelu_m@yahoo.com)

உலகில் தோன்றும் இலக்கியங்களில் வரலாற்றோடு தொடர்ந்து வந்து, மக்கள் வாழ்வோடு வளர்ந்து வருபவை மட்டுமே நிலைத்து நிற்கின்றன. அத்தகைய சிறப்புடன் திகழும் வாழும் வள்ளுத்திற்கு அதில் பொதிந்திருக்கும் கருத்துக்களே காரணங்கள். இக்கருத்துக்கள் விரிந்தும் வளர்ந்தும் வருவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளன. திருக்குறளின் இச்செறிவென்னும் பண்பு கருத்துக்களின் விரிவாக்கத்திற்கு முற்றிலும் துணை செய்கின்றன.

திருக்குறளின் பெருமைகளைத் தொகுத்து வழங்கும் திருவள்ளுவமாலையில் ஔவையின் குறள் வெண்பா ஒன்று திருக்குறளின் செறிவைச் சிறப்பாகக் கூறுகின்றது.

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். (திருவள்ளுவமாலை: 55)

ஓர் அணுவிற்குள் புகட்டப்பட்டிருக்கும் பொருளை விரித்தால் அது எத்தனை பேரளவாக விரிந்து வெளிப்படுமோ, அந்த அளவிற்கு ஒவ்வொரு குறளிலும் திருவள்ளுவர் புகுத்தியிருக்கும் கருத்துக்களை விரித்தால் அவை பல்கிப் பெருகும்,

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். (குறள்: 643)

சொல்வன்மை அதிகாரத்தில் வரும் இக்குறளுக்கு, "கேட்டவர்களை வயப்படுத்திக் கேளாதவர்களையும் கேட்க விரும்புமாறு சொல்ல வல்லதே சொல்வன்மையாகும்." (செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார்) என்று திருக்குறளுக்குக் கருத்துரை வழங்கியுள்ளார்.

ஓர் அவையில் ஒருவரது உரையைக் கேட்பவர்களை அவ்வுரையானது கட்டிப் போட்டு அமர வைக்க வேண்டும். அவ்வுரையைக் கேட்க இயலாதவர்களும் கேட்பதற்கு விரும்ப வேண்டும் என்பதுதான் இந்தக் குறளுக்கு இப்போது உரை எழுதும் ஆய்வாளர்கள் அனைவரும் தரும் விளக்கம் ஆகும்.

ஆனால், நண்பராயிருந்து தாம் சொன்னதை ஏற்றுக் கொண்டவர், பின்பு தன்னை விட்டுப் பிரியாதவாறு வயப்படுத்தும் தன்மைகளை விரும்பித் தழுவியும், பகைவராயிருந்து தம் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவரும், பின்பு அப்பகைமையை நீக்கி நட்பை விரும்பும் வண்ணம் சொல்வதே சொற்முறையாகும், என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் மரபுரை எடுத்துரைக்கிறது.

இந்தக் குறளில் வருகின்ற 'கேட்டார்', கேளார் என்னும் சொற்கள் பொருள் விளக்கத்திற்கு ஊற்றாக அமைகின்றன.

கேட்டார் என்பது உரையைக் கேட்டார்; நண்பராயிருந்து தம் சொல் கேட்டார்; சொற்பொழிவின் போது வினாக் கேட்டார்; பல்வகைச் சொற்பொழிவுகளையும் கேட்டார் என்று பற்பல பொருள்களில் விரித்துக் காண இடமளிக்கிறது.

இதைப்போலவே, கேளாதார் என்பது, அந்த உரையைக் கேட்காதவர்; பகைவராயிருந்து தம் சொற்கேட்டு நடக்காதவர்; சொற்பொழிவின் போது வினாக் கேளாதவர்; பல்வகைச் சொற்பொழிவுகளையும் கேட்காத கேள்வியறிவு இல்லாதவர் என்றும் பொருள்களையும் விரித்துரைக்க வகை செய்கிறது. கேட்டார், கேளாதார் என்பனவற்கு இன்னும் ஒரு புது பொருளைக் கூறுவதும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அவையில் அமர்ந்திருந்தவர்களில் உரையைக் கேட்கும் திறனுடையவர்கள் அவ்வுரையைக் கேட்டார்கள். அதனால் அவரது உரையால் பிணிக்கப்பட்டார்கள். ஆனால் கேட்கும் திறன் அற்றவர்கள், (இன்று மாற்றுத்திறனாளர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள்.) கேளாரும் அந்த அவையில் இருந்தார்கள். உரையைக் கேட்க முடியாத குறைபாடு இருந்த நிலையில் தாம் கேட்க வேண்டும் என்று விரும்பியவர்கள் கேட்க முடியவில்லையே என்று வருந்தினார்கள்.

மணிமேகலைக் காப்பியத்தில், மணிமேகலை அமுதிடும் தொண்டினைச் செய்வதற்குத் தேர்ந்தெடுத்தவர்களின் பட்டியலைக் குறிப்பிடுகையில்,

‘காணார், கேளார், கால்முடப் பட்டோர்’

என்று குறிப்பிடுகிறது. பார்வையற்றவர்களைக் காணார் என்றும், கேட்கும் திறனற்றவர்களைக் “கேளார்” என்றும் சீத்தலைச் சாத்தனார் புதுச் சொல்லாக்கம் வழங்கியமையைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

அடுத்தவொரு குறள் இல்வாழ்க்கை அதிகாரத்தில் இருந்து காண்போம்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (குறள்: 41)

இக்குறளுக்குக் கருத்துரையாக, இல்வாழ்வு வாழ்வான் தன் தந்தை, தாய், மனைவி ஆகிய மூவருக்கும் நிலைத்த துணையாக இருப்பான் என்றும்,

இல்வாழ்பவன் தனது பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவர்க்கும் உற்ற துணையாக இருப்பான் என்றும் பொருள் கூறி வருகின்றனர்.

முந்துரைகண்ட பதின்மரில் பரிமேலழகர் இயல்புடைய மூவர் என்பதற்கு வாழ்வின் நான்கு படிநிலைகளில் இல்லறத்தான், ஏனைய மூன்று நிலைகளில் இருக்கும் (பிரம்மச்சாரியத்தில் இருப்பவன்) திருமண வாழ்க்கைக்கு முந்திய நிலையில் இருப்பவன், மனைவியுடன் காட்டுக்குச் சென்று தவம் ஏற்றுக்கொள்பவன், முற்றும் துறந்த துறவு நிலையில் உள்ளவன் ஆகிய மூவருக்கும் உற்ற துணையாக இருப்பது இல்லறத்தான் கடமை என்று விரிவான விளக்கம் தருகிறார்.

ஆனால், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஏனைய மூவராவார் இருவகை அந்தணரும் இயல்புடைய என்னும் அடைமொழி அதிகார இயைபினால் இல்லறத்தாரைக் குறிக்குமே அன்றித் துறவறத்தாரைக் குறிக்காது. அந்தணர் (பார்ப்பனர்) முதலிய நால்வரும் இல்லறத்தாரா இருப்பாரேனும், அவருள்

தலைசிறந்தவர் வேளாளரே என்பது கருத்து என்று விளக்குகிறார். இது சமுதாய வாழ்வில் தொழில்சார் பிரிவினாரில் காணப்படும் அந்தணர், அரசன், வணிகர் என்னும் மற்ற மூன்று பிரிவினருக்கும் இல்லறத்தானுக்குக் குறியீடாக இருக்கும் வேளாளண் உற்று துணையாக இருப்பான் என்று தமிழ் மரபின் வழி நின்று இதன் விரிந்த பொருளை எடுத்துரைக்கிறார்.

இல்லறவாழ்வு, சமுதாய வாழ்வு இவ்விரண்டையும் தாண்டி நாட்டு வாழ்விற்கும் ஏற்றதொரு விளக்கத்தை இக்குறளில் இருந்து விரித்துப் பெறமுடியும் என்பதைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. தமது உரையில் குறிப்பிடுகிறார்.

'இல்வாழ்வான்' என்பதற்கு ஒரு நாட்டின் குடிமகன் என்று பொருள் கொள்கிறார். மக்களாட்சியில் அரசின் உறுப்புகள் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் என்பன. இந்த மூன்று அமைப்புகளில் இருந்து செயல்படுவோருக்கு உற்ற துணையாக இருந்து உதவ வேண்டுவது நாட்டு மக்கள் ஒவ்வொருவரது கடமையாகும். தேர்தலில் வாக்களித்துத் தக்க வகையில் சட்டமன்றத்தை உருவாக்குதல்; நிருவாகத்தில் இருப்போரின் பணிகள் செவ்வனே நடைபெற துணை நிற்றல் அதைப்போலவே நன்னெறி நடந்து நாட்டில் சிக்கல்களைக் குறைத்து நீதிமன்றம் உரிய வகையில் செயலாற்றவும் உற்ற துணை நிற்றல் என அக் கடமைகள் விரிகின்றன. எனவே இல்வாழ்வான் என்பவனை நாட்டின் குடிமகன் என்றும், இயல்புடைய மூவர் என்பதை நல்லாட்சி நடைபெறுவதற்கு இயல்பாகத் தேவையாக அமைகின்ற அரசின் மூன்று உறுப்புகளில் பணியாற்றுவோர் என்பது பொருளாகிறது. இந்த விரிந்த பொருளுக்கும் மூவாக் குறள் முற்றிலும் பொருந்திவருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

குறளில் பொருளை விரித்துக் கூறுவதற்கு வாய்ப்பாக திருவள்ளுவர் செய்திருக்கும் மற்றொரு நுட்பம் எந்தக் கருத்தையும் பொதுவாகச் சொல்வதாகும். எடுத்துக்காட்டாக,

அமைச்சு என்னும் அதிகாரத்தில் அமைந்த முதல் குறளைக் காணலாம்.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. (குறள்: 631)

இதில் கருவிகள் எவைஎவை என்பதை நம்மிடம் விரித்துரைக்க விட்டுவிடுகிறார். இதைப்போலவே காலம் செயல்கள் என்பனவற்றையும் அவரவர் அறிவின் ஆற்றலுக்கும் அத்துறையில் ஈடுபட்டு வரும் துறைசார் அறிஞர்களின் கருத்தாக்கத்திற்கும் ஏற்ப இவற்றை விரித்துரைத்துப் பொருள் கொள்வதற்கு வாய்ப்பளித்துள்ளார்.

அழுக்காறாமை அதிகாரத்தில் ஒரு குறள்,

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (குறள்: 166)

இக்குறள் "ஒருவன் பிறருக்குக் கொடுப்பதைப் பொறாமையால் தடுப்பவன் மட்டுமன்றி அவன் உறவினரும் உடுப்பும் உணவும் இன்றிக் கெடுவர்' என்று சுருக்கமான பொருள் தருகிறது.

இதில் நுட்பம் என்னவெனில் தனியொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளை வரிசைப்படுத்தும் போது உணவு, உடை, உறையுள் என்று கூறுவது மரபு. ஆனால்

அழுக்காற்றால் ஒருவனது உறவினர் இழப்பனவற்றுள் உடையை முதலில் குறிப்பிடுகிறார்.

அடிப்படைத் தேவைகளில் உணவு உயிரைக் காப்பது; உடை மானத்தைக் காப்பது; ஒருவருக்கு இக்கட்டான சூழலில் உயிரா மானமா என்ற இரண்டில் ஒன்றை இழந்து மற்றொன்றைக் காத்துக் கொள்ளலாம் என்ற நிலை வருமானால், வள்ளுவர் "உயிரை இழந்து மானத்தைக் காத்துக் கொள்" என்பார். அவருக்கு உயிரைவிட மானமே பெரிது வள்ளுவரின் இந்த உயிர்நிலை கருத்தை ஒட்டியே இக்குறள் அமைத்துள்ளது.

அழுக்காறுடையவரின் சுற்றம் முதலில் மானத்தை இழக்கும், மானத்தை இழந்த பின்பும் அவர்கள் உயிர் வாழ்வார்களேயானால் அவர்கள் உயிரையும் இழப்பர்" என்னும் கருத்தை இந்தக் குறட்பாவிலும் வள்ளுவர் உறுதியாக எடுத்துரைக்கிறார் என்பதை விரித்துச் சொல்லவும் இக்குறள் பொருள் பொதிந்ததாக உள்ளது.

சிறிய ஆலம் விதையொன்றில் வேரூன்றி விழுதுவிட்டுப் பறந்து நிற்கும் ஆலமரம் ஒன்று அடங்கி இருப்பதைப் போல, வெண்பாவின் சிறிய பாவாம் குறள் வெண்பா ஒவ்வொன்றும் குவலயத்தாரின் அறிவுத் திறனுக்கும் ஆளுமைக்கும் தக்கவாறு விரிந்த பொருளை வெளிக் கொணர்வதற்குரிய ஆழ்ந்த பொருளை உள்ளடக்கி இருக்கிறது திருக்குறள்.

# பேராசிரியர் பேசுகிறார்

## இதுதான் மக்களாட்சியா?



மக்கள் நன்மைக்காக மக்களால் மக்களைக் கொண்டே ஆளப்படுவது மக்களாட்சியாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழியினரும் சமயத்தினரும் கொள்கையினரும் நாற்பது கோடிக்குமேல் வாழ்ந்த போதிலும், மக்களாட்சி முறையைப் பின்பற்றி உலகம் புகழுமாறு ஆட்சி செலுத்துகின்றோம் என ஓயாது பறையறைந்து வருகின்றனர் ஆளுங்கட்சியினர்.

இந்தியக் கூட்டரசு ஆட்சியை நடத்தி வரும் கட்சியினர் மூன்று தேர்தல்களிலும் வெற்றி பெற்றுப் பதவிப் பீடத்தில் அமர்ந்திருப்பது உண்மைதான். இவ்வாறு அமர்ந்திருப்பது மக்களாட்சி முறைகளைப் பின்பற்றி வருவதன் பயனாகவா? அல்லது வேறு முறைகளைக் கையாண்டு வருவதன் தன்மையாலா?

வறுமை, அறியாமை, கல்வியறிவின்மை, அச்சம், பதவிப்பற்று, எப்படியும் உயிர் வாழ வேண்டும் என்ற நோக்கம் முதலியன நிறைந்திருக்கும் இப்பெருங்கண்டத்தில் மக்களாட்சி முறைக்கு மாறாகச் சென்றாலும் தடுத்து நிறுத்த எவரும் முன்வருவாரா? வந்தாலும் வெற்றி பெறல் கூடுமா? இந்தியக் கூட்டரசுப் பொறுப்பை ஏற்று நடத்தி வரும் ஆளுங்கட்சியினர், மக்களாட்சி முறையில் செல்லவில்லையென்பதற்கு இந்தியக் கூட்டரசு ஆட்சிமொழி பற்றி அவர்கள் கடைப்பிடித்து வரும் கொள்கையே தக்க சான்றாக அமையும்.

கூட்டரசு என்பது பல அரசுகளும் சேர்ந்து அமைத்துக் கொண்டுள்ள அரசாகும். கூட்டரசு ஆட்சியில் எல்லா அரசுகளுக்கும் - மாநிலங்களுக்கும் - சம உரிமையும் வாய்ப்பும் இருத்தல் வேண்டும். இல்லையேல் கூடி வாழும் கூட்டரசுக் கொள்கை மாய்ந்து ஒற்றையாட்சித் தன்மையே மேலோங்கி விடும். இந்தியக் கூட்டரசு உண்மையாகவே கூட்டரசாகவே என்றும் நீடித்திருக்க வேண்டும் என்றால் கூட்டரசு மொழிகளுள் ஒன்றாகிய இந்திக்கு மட்டும் தனி உரிமையும் செல்வாக்கும் அளித்தல் பொருந்தாது. இந்தி மொழி ஒன்றுதான் இந்தியக் கூட்டரசின் மொழி என்று கூறி ஏனைய அரசு மொழிகளை இரண்டாம் தர நிலைக்குத் தள்ளிவிட்டனர். இச்செயல் கூட்டரசுக் கொள்கைக்கு ஏற்றதன்று என அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் பெரியோர்களும் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழகத்தில் எதிர்க்கட்சியாய் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி முதன்மையை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி செய்து வருகின்றது. அதன் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பிறரும் சிறைக்குச் சென்று கொண்டு இருக்கின்றனர்.

இந்தியக் கூட்டரசு மக்களாட்சி முறையில் நம்பிக்கையும் பற்றும் கொண்டிருக்குமானால், இந்திக்கு முதன்மை தருவதை நிறுத்தி இருத்தல் வேண்டும். இந்தி முதன்மையை எதிர்ப் போரின் கூற்றுகளைச் செவிமடுத்துத் தாம் கடைப்பிடித்து வரும் இந்தி மொழிக் கொள்கையை நெகிழவிட்டிருக்க வேண்டும்.

இந்தியக் கூட்டரசு அவ்வாறு செய்திலதே!மாறாக, இந்தி முதன்மையை, விரும்பாதார் மீது சுமத்தும் செயல்முறைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்திய அரசுத்துறைப் பணியிணரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய தேர்வு மொழி இந்திதான் எனக் கூறியுள்ளது

இந்திய அரசுத்துறைப் பணியில் உள்ளோர் இந்திமொழிப்புலமை பெற்றாக வேண்டும் என அறிவித்து, பணியில் அமர்ந்துள்ளோரை இந்திமொழி படிக்குமாறு வற்புறுத்தி வருகின்றது. அவர்கள் அலுவலக நேரங்களிலேயே இந்தியைப் படிக்குமாறு கட்டாயப்படுத்தி வருகின்றது. படிக்காவிட்டால் வேலையுயர்வோ ஊதியவுயர்வோ கிட்டாது எனத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இந்தி மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டுள்ள பல்கலைக் கழகம் ஒன்றைத் தென்னாட்டில் தோற்றுவிப்பதற்கும் முயன்று வருகின்றது.

இம்மட்டோடு நிற்கின்றதா?

இந்திய மொழிகள் அனைத்தும் இந்தி மொழி எழுத்தாம் தேவநாகரியில் எழுதப்பட்ட வேண்டும் எனக் கூறி அதற்குரிய செயல்முறைகளிலும் ஈடுபட்டுள்ளளது.

ஒவ்வொரு மொழிக்கும் அதனதன் எழுத்தே உடலாகும். உடலாம் எழுத்தை அழித்தபின் உயிரணிகும் மொழி வாழ்வது எங்ஙனம்? ஆகவே ஏனைய மொழிகளை அழித்துவிட்டு இந்திமொழி ஒன்றை மட்டுமே நிலைக்கச் செய்வதற்கு ஒல்லும் வகையால் எல்லாம் ஓயாது முயன்று திட்டமிட்டுச் செயல்புரிந்து வருகின்றனர்.

இந்திய மொழிகளின் தாய் எனக் கருதத்தக்க நம் தாய்மொழியாம் தமிழையிழந்த பின்னர் நாம் வாழ்வது எற்றுக்கு? மொழியிழந்து, வாழ்விழந்து, மானமிழந்து வாழச் செய்வதா மக்களாட்சி முறை? உண்மையான மக்களாட்சி முறையில் ஒவ்வொருவர் நலனும் உரிமையும் காக்கப்படல் வேண்டும். இன்றேல் அது மாக்களாட்சியாகத்தான் கருதப்படும். இந்திமொழி எழுத்தைத் தமிழுக்குரிய எழுத்தாக ஆக்குவதைத் தடுத்து நிறுத்தல் வேண்டும். ஒற்றுமையின் பேரில் நம் உயிரனைய மொழியை அழிக்க வரும் திட்டத்தை உயிர் கொடுத்தேனும் தடுத்த நிறுத்த ஒன்றுபட்டெழுதல் தமிழரின்தலையாய கடனாகும். வேற்றுமைகளை மறந்து வீறுகொண்டு எழுமின். வெல்க தமிழ்.

**-மலர் 1 இதழ் 9; வைகாசி 2,1995 (15.5.1964)**